பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7
குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14
இப்னு பாஸ் ﵀ வாழ்க்கைக் குறிப்பு 21
1 சிறிய ஸூறாக்களின் மனனம் 25
2 இஸ்லாமின் தூண்கள் 41
3 ஈமானின் தூண்கள் 53
4 தவ்ஹீது மற்றும் ஷிர்க்கின் வகைகள் 65
5 இஹ்ஸான் 72
6 தொழுகையின் நிபந்தனைகள் 73
7 தொழுகையின் தூண்கள் 77
8 தொழுகையின் கடமைகள் 83
9 தஷ்ஷஹ்ஹுது ஒரு விளக்கம் 87
10 தொழுகையின் ஸுன்னத்துகள் 92
11 தொழுகையை முறிப்பவை 96
12 வுளூவின் நிபந்தனைகள் 99
13 வுளூவின் ஃபர்ளுகள் 101
14 வுளூவை முறிப்பவை 104
15 ஒவ்வொரு முஸ்லிமும் நற்குணங்களால் அலங்கரித்தல் 108
16 இஸ்லாமிய ஒழுக்கங்களைப் பேணுதல் 109
17 இணைவைப்பு மற்றும் பாவங்கள் குறித்த எச்சரிக்கை 113
18 இறந்தவரை அடக்க ஆயத்தம் செய்தல், அவருக்காகத் தொழுதல், அடக்கம் செய்தல் 117

1

சிறிய ஸூறாக்களின் மனனம்

❄

الدرس الأول سورة الفاتحة وقصار السور سورة الفاتحة وما أمكن من قصار السور، من سورة الزلزلة إلى سورة الناس، تلقينا، وتصحيحًا للقراءة، وتحفيظًا، وشرحًا لما يجب فهمه.

ஸூறா அல்-ஃபாத்திஹாவையும் ஸூறா அஸ்-ஸல்ஸலா (99) முதல் தொடங்கி ஸூறா அந்-நாஸ் (114) வரையுள்ள சிறிய ஸூறாக்களையும் பார்த்து நன்கு ஓத வேண்டும். அவற்றை மனனம் செய்துகொள்ள வேண்டும். அவற்றில் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டியதை விளக்கமாகத் தெரிந்துகொள்ளவும் வேண்டும்.

விளக்கம்

பேரறிஞர் ஷெய்க் அப்துல்லாஹ் இப்னு பாஸ் ﵀ அவர்கள் இந்த முதல் பாடத்தில் முஸ்லிம்கள் அனைவரும் அவரவர் சக்திக்கேற்ப ஸூறத்துல் ஃபாத்திஹாவையும் சிறிய ஸூறாக்களையும் கற்றுக் கொள்வது அவசியம் எனக் கூறியுள்ளார்கள். ஏனெனில், ரஸூல் ﷺ அவர்கள் மூலம் ஒரு ஸஹீஹான ஹதீஸ் வந்துள்ளது:

لاَ صَلاَةَ لِمَنْ لَمْ يَقْرَأْ بِفَاتِحَةِ الكِتَابِ

யார் ஃபாத்திஹத்துல் கிதாபை (ஸூறத்துல் ஃபாத்திஹாவை) ஓதவில்லையோ அவருக்குத் தொழுகையில்லை. (அறிவிப்பு: உபாதா இப்னுஸ் ஸாமித் ﵁, புகாரீ 756, முஸ்லிம் 394)

இந்த ஸூறாக்களை மக்களுக்குப் போதித்தக்கூடியவர் கீழ்க்காணும் முறைகளைக் கடைபிடிக்க வேண்டும். அவர்கள் படிக்கத் தெரியாதவர்களா இருந்தால் அவர்களுக்குப் படித்துக் காட்ட வேண்டும். அவர்கள் படிக்கத் தெரிந்தவர்களாக இருந்தால் அந்த நிலையிலிருந்து இரண்டாவது நிலைக்குக் கொண்டு வருவது அந்த ஆசிரியருக்குக் கடமையாகும். அந்த நிலை என்பது அவரைச் சரியாக ஓதவைப் பதாகும். பின்னர், மூன்றாவது நிலைக்குக் கொண்டு செல்ல

2

இஸ்லாமின் தூண்கள்

❄

الدرس الثاني أركان الإسلام بيان أركان الإسلام الخمسة، وأولها وأعظمها : شهادة أن لا إله إلا الله، وأن محمدا رسول الله بشرح معانيها، مع بيان شروط لا إله إلا الله، ومعناها : لا إله نافيا جميع ما يعبد من دون الله، إلا الله مثبتا العبادة لله وحده لا شريك له . وأما شروط لا إله إلا الله فهي : العلم المنافي للجهل، واليقين المنافي للشك، والإخلاص المنافي للشرك، والصدق المنافي للكذب، والمحبة المنافية للبغض، والانقياد المنافي للشرك، والقبول المنافي للرد، والكفر بما يعبد من دون الله . وقد جمعت في البيتين الآتيين :

علمٌ يقينٌ وإخلاصٌ وصدقُك مَعْ ... محبَّةٍ وانقيادٍ والقبولُ لها

وزِيدَ ثامِنُها الكفرانُ منك بما ... سوى الإله من الأشياء قد أُلِّها

مع بيان شهادة أن محمدا رسول الله، ومقتضاها : تصديقه فيما أخبر، وطاعته فيما أمر، واجتناب ما نهى عنه وزجر، وألا يعبد الله إلا بما شرعه الله ورسوله . ثم يبين للطالب بقية أركان الإسلام الخمسة، وهي : الصلاة، والزكاة، وصوم رمضان، وحج بيت الله الحرام لمن استطاع إليه سبيلا .

இஸ்லாமிய மார்க்கத்தின் ஐந்து தூண்கள் குறித்து விளக்கத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். அதில் முதலாவது, லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று சாட்சி பகர் வதாகும். சாட்சி பகர்தல் என்பது லா இலாஹ இல்லல்லாஹ் வின் நிபந்தனைகளையும் அதன் பொருளையும் விவரிப்பதுடன் அமைய வேண்டும். 'லா இலாஹ' என்பதன் பொருள், அல் லாஹ்வைத் தவிர வணங்கப்படும் அனைத்தையும் மறுப்ப தாகும். 'இல்லல்லாஹ்' என்பதன் பொருள், வணக்கத்தை அல்லாஹ் விற்கு யாரையும் இணையாக்காமல் அவனுக்கு மட்டுமே உரித்

4

தவ்ஹீது மற்றும் ஷிர்க்கின் வகைகள்

❄

الدرس الرابع أقسام التوحيد وأقسام الشرك بيان أقسام التوحيد، وهي ثلاثة : توحيد الربوبية، وتوحيد الألوهية، وتوحيد الأسماء والصفات . أما توحيد الربوبية : فهو الإيمان بأن الله سبحانه الخالق لكل شيء، والمتصرف في كل شيء، لا شريك له في ذلك . وأما توحيد الألوهية : فهو الإيمان بأن الله سبحانه هو المعبود بحق لا شريك له في ذلك، وهو معنى لا إله إلا الله، فإن معناها : لا معبود حق إلا الله، فجميع العبادات من صلاة وصوم وغير ذلك يجب إخلاصها لله وحده، ولا يجوز صرف شيء منها لغيره . وأما توحيد الأسماء والصفات : فهو الإيمان بكل ما ورد في القرآن الكريم، أو الأحاديث الصحيحة من أسماء الله وصفاته، وإثباتها لله وحده على الوجه اللائق به سبحانه من غير تحريف، ولا تعطيل، ولا تكييف، ولا تمثيل ؛ عملا بقول الله سبحانه : { قُلْ هُوَ اللَّهُ أَحَدٌ ۝١ اللَّهُ الصَّمَدُ ۝٢ لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ ۝٣ وَلَمْ يَكُنْ لَهُ كُفُوًا أَحَدٌ ۝٤ } [الصمد : كاملة]، وقوله { لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ وَهُوَ السَّمِيعُ الْبَصِيرُ} [الشورى : ۝١١]، وقد جعلها بعض أهل العلم نوعين، وأدخل توحيد الأسماء والصفات في توحيد الربوبية، ولا مشاحة في ذلك ؛ لأن المقصود واضح في كلا التقسيمين .

وأقسام الشرك ثلاثة : شرك أكبر، وشرك أصغر، وشرك خفي . فالشرك الأكبر : يوجب حبوط العمل والخلود في النار لمن مات عليه، كما قال الله تعالى : {وَلَوْ أَشْرَكُوا لَحَبِطَ عَنْهُمْ مَا كَانُوا يَعْمَلُونَ } [الأنعام : ۝٨٨]، وقال سبحانه : { مَا كَانَ لِلْمُشْرِكِينَ أَنْ يَعْمُرُوا مَسَاجِدَ اللَّهِ شَاهِدِينَ عَلَى أَنْفُسِهِمْ بِالْكُفْرِ أُولَئِكَ حَبِطَتْ أَعْمَالُهُمْ وَفِي النَّارِ هُمْ خَالِدُونَ } [التوبة : ۝١٧]، وأن من مات عليه فلن يغفر له، والجنة عليه حرام، كما قال الله { إِنَّ اللَّهَ لَا يَغْفِرُ أَنْ يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذَلِكَ لِمَنْ يَشَاءُ} [النساء : ۝٤٨]، وقال سبحانه : {إِنَّهُ مَنْ يُشْرِكْ بِاللَّهِ فَقَدْ حَرَّمَ اللَّهُ عَلَيْهِ الْجَنَّةَ وَمَأْوَاهُ النَّارُ وَمَا لِلظَّالِمِينَ مِنْ أَنْصَارٍ } [المائدة : ۝٧٢] .

6

தொழுகையின் நிபந்தனைகள்

❄

الدرس السادس

شروط الصلاة وهي تسعة :

الإسلام، والعقل، والتمييز، ورفع الحدث، وإزالة النجاسة، وستر العورة، ودخول الوقت، واستقبال القبلة، والنية .

தொழுகையின் நிபந்தனைகள் ஒன்பதாகும். அவை:

1. முஸ்லிமாக இருப்பது
2. புத்தி சுவாதீனம்
3. பகுத்தறிவு
4. தொடக்கை அகற்றுவது
5. அசுத்தத்தை நீக்குவது
6. மறைக்க வேண்டிய உறுப்புகளை மறைப்பது
7. தொழுகைக்கான நேரம்
8. கிப்லாவை முன்னோக்குவது
9. நிய்யத்

விளக்கம்

இஸ்லாமின் ஐம்பெரும் கடமைகளில் தொழுகைதான் ஷஹாதத் கலிமாவிற்குப் பின் மிகவும் உறுதிவாய்ந்த கடமையாகும். எனவே தான், இப்பாடத்தில் தொழுகையின் நிபந்தனைகள் கற்றுத்தரப் படுகின்றன. நிபந்தனைகள் நிறைவேறாமல் தொழுகை கூடாது. எனவே, அவற்றை முதலில் அறிவது பொருத்தமானதாக உள்ளது.

10

தொழுகையின் ஸுன்னத்துகள்

❄

الدرس العاشر سنن الصلاة ومنها :

١. الاستفتاح .

٢. جعل كف اليد اليمنى على اليسرى فوق الصدر حين القيام، قبل الركوع وبعده .

٣. رفع اليدين مضمومتي الأصابع ممدودة حذو المنكبين أو الأذنين عند التكبير الأول، وعند الركوع، والرفع منه، وعند القيام من التشهد الأول إلى الثالثة .

٤. ما زاد عن واحدة في تسبيح الركوع والسجود .

٥. ما زاد على قول : ربنا ولك الحمد بعد القيام من الركوع، وما زاد عن واحدة في الدعاء بالمغفرة بين السجدتين .

٦. جعل الرأس حيال الظهر في الركوع .

٧. مجافاة العضدين عن الجنبين، والبطن عن الفخذين، والفخذين عن الساقين في السجود .

٨. رفع الذراعين عن الأرض حين السجود .

٩. جلوس المصلي على رجله اليسرى مفروشة، ونصب اليمنى في التشهد الأول وبين السجدتين

١٠. التورك في التشهد الأخير في الرباعية والثلاثية وهو : الجلوس على مقعدته وجعل رجله اليسرى تحت اليمنى ونصب اليمنى .

١١. الإشارة بالسبابة في التشهد الأول والثاني من حين جلس إلى نهاية التشهد وتحريكها عند الدعاء .

١٢. الصلاة والتبريك على محمد، وآل محمد، وعلى إبراهيم، وآل إبراهيم في التشهد الأول .

١٣. الدعاء في التشهد الأخير .

١٤. الجهر بالقراءة في صلاة الفجر، وصلاة الجمعة، وصلاة العيدين، والاستسقاء، وفي الركعتين

12

வுளூவின் நிபந்தனைகள்

❄

الدرس الثاني عشر

شروط الوضوء وهي عشرة :

الإسلام، والعقل، والتمييز، والنية، واستصحاب حكمها بأن لا ينوي قطعها حتى تتم طهارته، وانقطاع موجب الوضوء، واستنجاء أو استجمار قبله، وطهورية ماءه وإباحته، وإزالة ما يمنع وصوله إلى البشرة، ودخول وقت الصلاة في حق من حدثه دائم .

வுளூ உடைய நிபந்தனைகள் பத்து. அவை:

1. முஸ்லிமாக இருத்தல்.
2. உணர்வுள்ளவராக இருத்தல்.
3. புத்திசுவாதீனம் உள்ளவராக இருத்தல்.
4. நிய்யத்.
5. வுளூ செய்து முடிக்கும்வரை நிய்யத்தை முறித்திடாத முறையில் அதன் சட்டத்தைப் பேணியிருத்தல்.
6. வுளூவைக் கட்டாயமாக்கும் காரியம் ஏற்படாமல் இருத்தல்.
7. (தேவைப்பட்டால்) வுளூவுக்கு முன் தண்ணீராலோ, கற்களாலோ சுத்தம் செய்திருத்தல்.
8. அது சுத்தமானதாகவும் ஆகுமானதாகவும் இருத்தல்.
9. வுளூ செய்யும் உறுப்புகளில் தண்ணீரைச் சேரவிடாமல் தடுக்கின்ற பொருள் இல்லாதிருத்தல்.
10. தொடர்ந்து எப்போதும் வுளூ முறிந்துவிடுகின்ற நிலையில் உள்ளவர் வுளூ செய்வதாயிருந்தால் தொழுகையின் நேரம் வந்திருத்தல்.

புழுப்பூச்சிகள், முடி, பொடிக்கல் போன்ற எப்போதேனும் வரக்கூடியவை. இதுவும் வுளூவை முறித்துவிடும். ஏனெனில், நபி ﷺ அவர்கள் சீக்கு இரத்தம் வரக்கூடிய பெண்ணிடம் 'ஒவ்வொரு தொழுகைக்கும் நீ வுளூ செய்துகொள்' எனக் கூறியுள்ளார்கள். இந்த இரத்தம் வழமையாக வரக்கூடியதல்ல. மேலும், இது முன் பின் துவார வழியாக வருவதால் வழமையாக வரக்கூடியதற்கு ஒப்பாகிவிட்டது.

2. உடலிலிருந்து அதிகமாக வெளிறேக்கூடிய நஜீஸ் (அசுத்தம்). இதில் அதிகம் வுளூவை முறித்துவிடும். இதில் குறைவானால் வுளூவை முறிக்காது. உதாரணமாக: இரத்தத்தைப் போல. இது அதிகமானால் வுளூ முறிந்துவிடும். குறைவானால் வுளூ முறியாது. இப்னு அப்பாஸ் ؓ அவர்கள் கூறினார்கள்: இது அதிகமானால் அதைத் திரும்பச் செய்வது அவனுக்குக் கட்டாயமாகும். இப்னு உமர் ؓ அவர்கள் ஒரு கட்டியை நசுக்கினார்கள்; இரத்தம் வெளியேறியது; வுளூ செய்யாமலேயே தொழுதார்கள். நபித்தோழர்களில் இவ்விருவரின் கருத்துகளுக்கும் மாற்றுக் கருத்துக்கொண்டவர்கள் இல்லை. எனவே, இது எல்லோரின் ஒருமித்தக் கருத்தாக ஆகிவிட்டது.

3. தூக்கம் அல்லது அது அல்லாதது கொண்டு அறிவு நீங்கிவிடுவது. பைத்தியம், மயக்கம், போதை போல. அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

الْعَيْنُ وِكَاءُ السَّهِ، فَمَنْ نَامَ، فَلْيَتَوَضَّأْ

கண் புட்டத்திற்கு மூடியாகும். எனவே, யாரேனும் தூங்கிவிட்டால் அவர் வுளூ செய்துகொள்ளட்டும். (அறிவிப்பு: அலீ ؓ, இப்னு மாஜா 477, ஸஹீஹ் இப்னு மாஜா 386)

மயக்கம், பைத்தியம், போதை இவை புத்தியை நீக்கிவிடுகின்றன. எனவே, நிச்சயமாக இவை வுளூவை முறித்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.

4. திரையின்றி முன் பின் துவாரத்தைத் தொடுதல். நபிமொழி:

مَنْ مَسَّ ذَكَرَهُ فَلْيَتَوَضَّأْ

யாரேனும் தமது மறைவிடத்தைத் தொட்டுவிட்டால் வுளூ செய்துகொள்ளட்டும். (அறிவிப்பு: புஸ்ரது பின்து ஸஃப்வான் ؓ, அபூ தாவூது 181, ஸஹீஹ் அபூ தாவூது 175)

17

இணைவைப்பு மற்றும் பாவங்கள் குறித்த எச்சரிக்கை

❋

الدرس السابع عشر التحذير من الشرك وأنواع المعاصي ومنها : السبع الموبقات المهلكات وهي : الشرك بالله، والسحر، وقتل النفس التي حَرم الله إلا بالحق، وأكل الربا، وأكل مال اليتيم، والتولي يوم الزحف، وقذف المحصنات الغافلات المؤمنات .

ومنها : عقوق الوالدين، وقطيعة الرحم، وشهادة الزور، والأيمان الكاذبة، وإيذاء الجار وظلم الناس في الدماء، والأموال، والأعراض، وشرب المسكر، ولعب القمار- وهو : الميسر- والغيبة، والنميمة، وغير ذلك مما نهى الله عنه، أو رسوله .

இணைவைத்தல் மற்றும் பாவங்களைவிட்டும் ஒதுங்கிக்கொள்ள வேண்டும். இதிலுள்ளதுதான்:

மனிதனை ஒழித்து நாசமாக்கிவிடக்கூடிய ஏழு காரியங்கள். அவை:

1. அல்லாஹ்விற்கு இணை வைத்தல்.
2. சூனியம் செய்தல்.
3. தகுந்த காரணமில்லாமல் அல்லாஹ் ஹறாமாக்கிய ஓர் உயிரைக் கொலை செய்தல்.
4. அனாதைகளின் பொருளை உண்ணுதல்.
5. வட்டி உண்ணுதல்.
6. போர்க்காலத்தில் புறமுதுகிட்டு ஓடுதல்.
7. மூஃமினான கற்புள்ள நல்ல பெண்கள்மீது விபசாரக் குற்றம் சாட்டுதல்.

பின்வரும் வருபவையும் பெரும்பாவங்களில் அடங்கும்: